**மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயம் ( சார்பு நீதிமன்றம்), பொள்ளாச்சி**

**முன்னிலை திரு. M. மணிகண்டன், M.A., M.L., PG.D, C.F.Sc, சார்பு நீதிபதி, பொள்ளாச்சி**

2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20 ம் நாள் வியாழக்கிழமை
(2057 திருவள்ளுவர் ஆண்டு, பராபவ வருடம், ஆவணி மாதம் 03 ம் நாள்)

**மோ.வா.வி.கோ.மனு எண். 176/2020**
CNR No. TNCB-11001048-2019

C.வெங்கடேஷ், த/பெ. செழியன், இந்து, வயது 19, வசிப்பிட முகவரி கதவு எண்.1/1052, EB Quarters, வால்பாறை தாலூக்கா, கோயமுத்தூர் மாவட்டம்.

...மனுதாரர்

**/எதிர்/**

1. S.ராஜபாண்டி, த/பெ. சண்முகவேல், இந்து, வயது 38, வசிப்பிட முகவரி கதவு எண்.65-46, பன்னிமேடு எஸ்டேட், வால்பாறை தாலூக்கா, கோயமுத்தூர் மாவட்டம்.

2. நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் லிமிடெட், எண்.37, மேட்டுப்பாளையம் ரோடு, கோயமுத்தூர் மாவட்டம்.

3. K.ஆரோக்கியராஜ், த/பெ. கருப்பையா, வயது 45, வசிப்பிட முகவரி அக்காமலை தேயிலைத் தோட்டம், வால்பாறை தாலூக்கா, கோயமுத்தூர் மாவட்டம்.

4. நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் லிமிடெட், எண்.37, மேட்டுப்பாளையம் ரோடு, கோயமுத்தூர் மாவட்டம்.

...எதிர்மனுதாரர்கள்

இம்மனுவானது கடந்த 14.08.2026 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரருக்காக அறிவார்ந்த வழக்கறிஞர் திரு.S.பிரவீன்குமார், பி.ஏ.,

பி.எல்., அவர்கள் ஆஜராகியும், 1, 3 எதிர்மனுதாரர்களை இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாதரப்பினர்களாக்கப்பட்டும், 2, 4 எதிர்மனுதாரர்களுக்காக அறிவார்ந்த வழக்கறிஞர் திரு.V.R.சந்திரசேகர், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் என்னால் கேட்கப்பட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் எனது சீரிய ஆய்விற்கு உட்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பகரும்,

<u>**உத்தரவு**</u>

இந்த மனுவானது எதிர்மனுதாரர்கள், மனுதாரருக்கு இழப்பீடாக ரூ.5,00,000/- மும், மேற்படி தொகைக்கு மனுதாக்கல் செய்த 19.08.2019ம் தேதியிலிருந்து தொகை செலுத்தும் தேதிவரை 18 சதவிதிக வட்டி செலுத்த உத்தரவு பிறப்பிக்கக் கோரியும், இம்மனு செலவு தொகை மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>மனுவின் சாராம்சம் :</u>**

**2.1)** மனுதாரர் கடந்த 16.03.2018ம் தேதியன்று மாலை சுமார் 06.50 மணியளவில் பள்ளி முடிந்து வால்பாறையில் உள்ள தனது வீட்டிற்கு செல்வதற்காக தமிழக அரசு போக்குவரத்து கழகத்திற்கு சொந்தமான TN 43 N 0533 என்ற பதிவெண் கொண்ட பேருந்தில் பொள்ளாச்சி – வால்பாறை ரோட்டில் ஆழியார் பாலம் அருகே கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி 1ம் எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஹாரன் அடிக்காமலும், மனித உயிருக்கு சேதம் விளைவிக்கும் வகையில் ஓட்டிச்சென்ற நிலையில் மேற்படி பொள்ளாச்சி – வால்பாறை ரோட்டில் ஆழியார் பாலம் அருகே எதிரே தமிழக அரசு போக்குவரத்து கழகத்திற்கு சொந்தமான TN 38 N 1302 என்ற பதிவெண் கொண்ட பேருந்தை 3ம் எதிர்மனுதாரர் ஓட்டி வந்த பேருந்தின் மீது 1ம்

எதிர்மனுதாரர் மோதியதில் மனுதாரருக்கு வலது கண், நெஞ்சு, தலை, வலதுகால் முட்டி, இடது கை மணிகட்டு, வலது கை விரல்கள் மற்றும் உடல் முழுவதும் பலத்த இரத்த கொடுங்காயமும், எலும்பு முறிவும் ஏற்பட்டு பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக கூறப்பட்டுள்ளது.

**2.2)** விபத்து சமயத்தில் மனுதாரருக்கு 19 வயது என்றும், விபத்து மசயத்தில் மனுதாரர் ஸ்ரீ வெங்கடேஷ்வரா மெட்ரிக் மேல்நிலை பள்ளியில் பயின்று கொண்டிருந்தார் என்றும், 1ம் எதிர்மனுதாரர் மனுதாரர் சென்ற வாகனத்தின் ஓட்டுனர் என்றும், 2ம் எதிர்மனுதாரர் மேற்படி வாகனத்தின் நிர்வாக இயக்குநர் என்றும், 3ம் எதிர்மனுதாரர் விபத்தின் போது எதிரே வந்த வாகனத்தின் ஓட்டுனர் என்றும், 4ம் எதிர்மனுதாரர் மேற்படி வாகனத்தின் நிர்வாக இயக்குநர் என்றும், மனுதாரருக்கு ஏற்பட்ட காயம், மன உளைச்சல், வலி மற்றும் வருமான இழப்பு ஆகியவற்றிற்கு நஷ்ட ஈடாக ரூ.5,00,000/- கோரப்பட்டுள்ளதாக இம்மனுவில் கூறப்பட்டுள்ளது.

**3**. 1, 3ம் எதிர்மனுதாரர்கள் ஒருதலைபட்ச நிலைக்கு உட்படுத்தப்பட்டு அவ்வாறே இருந்து வருகின்றனர்.

**4. 2, 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சாராம்சம்:**

மனுவானது பொய்யானது என்றும், சட்டப்படி ஒத்துக்கொண்ட பொருண்மைகளை தவிர இதர பொருண்மைகளை மனுதாரர் தான் மெய்பிக்க வேண்டும் என்றும், 1ம் எதிர்மனுதாரர் இருசக்கர வாகனத்தை ஓவர்டேக் செய்யும்போது எதிர்பாராத விதமாக 3ம் எதிர்மனுதாரர் எதிரே வந்த நிலையில் 1ம் எதிர்மனுதாரரின் கட்டுப்பாட்டினை மீறி மோதிவிட்டது என்றும், மனுதாரர், 1ம் எதிர்மனுதாரர் ஓட்டிச்சென்ற வாகனத்தின் கடைசி சீட்டின் மூலையின்

அமர்ந்திருந்தார் என்றும், விபத்தானது ஓட்டுநரின் கட்டுப்பாட்டை மீறி நடைபெற்ற நிகழ்வு என்றும், எனவே 2, 4 எதிர்மனுதாரர்கள் இழப்பீட்டு செலுத்த கடமைப்பட்டவர்கள் அல்ல என்றும், மனுதாரர் கோரியுள்ள இழப்பீட்டுத் தொகைக்கான வட்டியானது மிகவும் அதிகமாக உள்ளது என்றும், 6% வட்டி பெறவே மனுதாரர் தகுதி பெற்றவர் என்றும், மனுதாரர் கோரியுள்ள இழப்பீடானது மிகவும் அதிகமாக உள்ளது என்றும், ஆதலால் 2, 4 எதிர்மனுதாரர்களைப் பொருத்து மேற்படி மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமாய் கூறப்பட்டுள்ளது.

5. <u>இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில்,</u>

1. விபத்தானது 1ம் எதிர்மனுதாரரின் அஜாக்கிரதையாலும், அதிவேகத்தாலும் மற்றும் கவனக்குறைவாலும் ஏற்பட்டதா ?

2. மனுதாரருக்கு எதிர்மனுதாரர்கள் இழப்பீடு வழங்கக் கடமைப்பட்டவர்களா? ஆம் என்றால் எவ்வளவு ?

3. மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரங்கள் என்ன ?

**6.** இம்மனுவில் மனுதாரர் தரப்பில் ம.சா.1 சாட்சி விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

7. <u>பிரச்சினை 1–க்கான தீர்வு :–</u>

7.1) இந்த மனுவில் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் ம.சா.1 ஐ கவனமாக பரிசீலனை செய்யும் போது மனுதாரர் கடந்த 16.03.2018 ம் தேதியன்று மாலை சுமார் 06.50 மணியளவில் பள்ளி முடிந்து வால்பாறையில் உள்ள தனது வீட்டிற்கு செல்வதற்காக தமிழக அரசு போக்குவரத்து கழகத்திற்கு சொந்தமான TN 43 N 0533 என்ற பதிவெண்

கொண்ட பேருந்தில் பொள்ளாச்சி – வால்பாறை ரோட்டில் ஆழியார் பாலம் அருகே கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி 1ம் எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஹாரன் அடிக்காமலும், மனித உயிருக்கு சேதம் விளைவிக்கும் வகையில் ஓட்டிச்சென்ற நிலையில் மேற்படி பொள்ளாச்சி – வால்பாறை ரோட்டில் ஆழியார் பாலம் அருகே எதிரே தமிழக அரசு போக்குவரத்து கழகத்திற்கு சொந்தமான TN 38 N 1302 என்ற பதிவெண் கொண்ட பேருந்தை 3ம் எதிர்மனுதாரர் ஓட்டி வந்த பேருந்தின் மீது 1ம் எதிர்மனுதாரர் மோதியதில் மனுதாரருக்கு வலது கண், நெஞ்சு, தலை, வலதுகால் முட்டி, இடது கை மணிகட்டு, வலது கை விரல்கள் மற்றும் உடல் முழுவதும் பலத்த இரத்த கொடுங்காயமும், எலும்பு முறிவும் ஏற்பட்டு பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

7.2) மேலும் 2, 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாதிட்ட வழக்கறிஞர் மனுதாரர் விபத்து நடந்த சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் ஓட்டி சென்ற வாகனத்தில் பயணம் செய்தாரா என்பதை பொறுத்து சந்தேகம் எழுகிறது என்றும், செல்லையன் மகன் வெங்கடேஷ் என்பவருக்கு தான் காயம் அடைந்தது என்றும், மனுதாரர் செழியன் மகன் வெங்கடேஷ் என்றும் எனவே மனுதாரர் தான் விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் ஓட்டிசென்ற வாகனத்தில் பயணம் செய்தார் என்பதை நிரூபணம் செய்யவேண்டுமென்று வாதிட்டார். இதனைப் பொறுத்து இந்த நீதிமன்றம் ம.சா.1ன் சாட்சியத்தையும், ம.சா.ஆ.4 விபத்து பதிவேட்டினையும் பரிசீலனை செய்யும்போது மனுதாரரான வெங்கடேஷ், த/பெ. செழியன் என்பவருக்கு வலது கண் புருவத்தில் அடிப்பட்டுள்ளது என்பது இந்த நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணங்களை பரிசீலனை செய்யும்போது குறிப்பாக காவல் துறை சம்பந்தப்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்யும்போது 1ம் எதிர்மனுதாரர் மீது

தான் முதல் தகவல் அறிக்கையும், பின்னிட்டு இறுதி அறிக்கையும் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. மேலும் 1ம் எதிர்மனுதாரர் மீது தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கைக்கு எதிராக எவ்வித முறையீடும் தாக்கல் செய்யாத நிலையில் 1ம் எதிர்மனுதாரர் தான் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டி வந்து விபத்தினை ஏற்படுத்திவிட்டார் என்று இந்த நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது.

**<u>8. பிரச்சனை 2 மற்றும் 3–க்கான தீர்வு :–</u>**

8.1) இந்த வழக்கில் மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய இழப்பீட்டு எவ்வளவு என்று இந்த நீதிமன்றம் கவனமாக பரிசீலனை செய்யும் போது ம.சா.ஆ.4 ஆக தாக்கல் செய்யப்பட்ட விபத்து பதிவேட்டினை இந்த நீதிமன்றம் பரிசீலனை செய்யும்போது மனுதாரருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த வழக்கில் மனுதாரர் தரப்பில் மருத்துவ பில்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட விபத்து பதிவேட்டினை இந்த நீதிமன்றம் பரிசீலனை செய்யும்போது மனுதாரருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்பதால் அவருக்கு ஏற்பட்ட சாதாரண காயத்திற்காக ரூ.15,000/– கிடைக்கத்தக்கது என்று இந்த நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது.

8.2) மேலும் மனுதாரர் விபத்து சமயத்தில் ஸ்ரீ விக்னேஷ்வரா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 11ம் வகுப்பு படித்து வந்ததாக மனுதாரர் தரப்பில் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மனுதாரருக்கு விபத்தினால் வருமான இழப்பு ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை என்று இந்த நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது. மேலும் மனுதாரருக்கு ஏற்பட்ட வலி மற்றும் வேதனைகளுக்காக ரூ.5,000/– மும், ஊட்டச்சத்து உணவிற்காக ரூ.2,000/–மும் கிடைக்கத்தக்கது என்று முடிவிற்கு

வருகிறது. ஆகவே

## Calculation Sheet

| Sl.No. | Under the Head | Amount |
|---|---|---|
| 1. | For Simple Injury | **Rs. 15,000/-** |
| 2. | For Pain and Sufferings | **Rs. 5,000/-** |
| 3. | For Extra Nourishment | **Rs. 3,000/-** |
| | **Total** | **Rs.23,000/-** |

எனவே இந்த மனுவில் மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய இழப்பீட்டு தொகை **ரூ.23,000/–** அவ்வாறே பிரச்சனை எண்கள்.2 மற்றும் 3 ஐ 0.தீர்மானிக்கிறேன்.

"மேற்கண்ட வழக்கில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் M/s.Cholamandalam MS General Insurance Company Limited., Vs. Ayyanar & others. (2020 (4) CTC 272) என்ற வழக்கில் வழங்கிய உத்தரவின் படி இறுதி உத்தரவு தயார் செய்யப்படாது."

"மேலும் MV Act Section 168(2) மற்றும் விதி 20 (6)ன் படி தரப்பினர்கள் உத்தரவின் நகலை இலவசமாகப் பெறத்தக்கவர்கள்."

ஆகவே, **முடிவாக,** இம்மனு பகுதியாக செலவு தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரருக்கு, எதிர்மனுதாரர்கள் இழப்பீட்டு தொகை ரூ.23,000/–ஐ மனுதாக்கல் தேதியிலிருந்து தொகை வசூலாகும் தேதிவரை ஆண்டு ஒன்றுக்கு 7.5% வட்டியுடன் (தள்ளுபடி காலம் நீங்கலாக) இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் Motor Accident Claims Tribunal/Subordinate Judge, State Bank of India. Pollachi Branch Account Number SJPOY1 IFSC Code SBIN0004266 என்ற வங்கி கணக்கில் நேரடியாக வங்கி மாற்றம் மூலம் செலுத்தவேண்டும் என்று

உத்தரவிடப்படுகிறது. மேற்படி தொகை மற்றும் மனுதாரரின் செலவுதொகை மற்றும் மொத்தத் தொகைக்கான வட்டி ஆகியவைகள் செலுத்தப்பட்டவுடன் இத்தீர்ப்பாயத்தை அணுகி உரியவங்கி அறிவுறுத்தலைப் பெற்று, மேற்படி மனுதாரருக்கான இழப்பீட்டு தொகை குறைவாக இருப்பதால் எதிர்மனுதாரர்கள் தொகை செலுத்தியவுடன் மனு தாக்கல் செய்து பெற்றுக்கொள்ள உத்தரவிடப்படுகிறது. பற்றாக்குறை நீதிமன்றக் கட்டணம் இருப்பின் 1 மாதத்திற்குள் நீதிமன்றத்தில் செலுத்த உத்தரவிடப்படுகிறது. அவ்வாறு செலுத்தத் தவறும் பட்சத்தில் செலுத்தத் தவறிய காலத்திற்கு உரிய வட்டியை இழப்பதோடு, செலுத்தும் வரை இவ்வுத்தரவு நிறைவேற்றுதற்குரியது அல்ல என்றும் உத்தரவிடப்படுகிறது. **வழக்கறிஞர் கட்டணம் ரூ.1,500/–** எனவும், **நீதிமன்ற கட்டணம் ரூ.42.50** எனவும் நிர்ணயம் செய்யப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு அவரால் குறிப்பு எடுக்கப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு 2026 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

M MANIKANDAN Digitally signed by M MANIKANDAN
Date: 2026.08.20 16:57:45 +0530

மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயம்/
சார்பு நீதிபதி,
பொள்ளாச்சி

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்:</u>**

| | |
|---|---|
| ம.சா.1 | வெங்கடேஷ் |

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| குறியீடு | தேதி | ஆவணம் மற்றும் அதன் தன்மை |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 16.03.2018 | முதல் தகவல் அறிக்கை உண்மை நகல் |

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.2 | 19.03.2018 | TN 43 N 0533 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை சான்று நகல் |
| ம.சா.ஆ.3 | 19.03.2018 | TN 38 N 1302 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை சான்று நகல் |
| ம.சா.ஆ.4 | 16.03.2018 | விபத்து பதிவேடு உண்மை நகல் |
| ம.சா.ஆ.5 | 16.03.2018 | இறுதி அறிக்கை சான்று நகல் |
| ம.சா.ஆ.6 | – | மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) |
| ம.சா.ஆ.7 | – | மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகத்தின் நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) |

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :</u>** **இல்லை**

M MANIKANDAN

Digitally signed by M MANIKANDAN
Date: 2026.08.20 16:57:50 +0530

மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயம்/
சார்பு நீதிபதி,
பொள்ளாச்சி.

**FAIR ORDER/ DRAFT ORDER**

MCOP No.176/2020

20.08.2026

Sub Court, Pollachi